# முஸாபகதுர் ரமழான் 1438 க்கான கேள்விகளும் பதில்களும்

## மிகப் பொருத்தமான விடையினைத் தெரிவு செய்க.

**1. அய்கா வாசிகள் என்பவர்கள் யார்?**

1. ஷுஐப் (அலை) அவர்களின் கூட்டத்தினர் 2. சுலைமான் (அலை) அவர்களின் கூட்டத்தினர் 3. ஸப.். கூட்டத்தினர்.

**2. ஸப.். கூட்டத்தினர் பற்றி சுலைமான் (அலை) அவர்களுக்கு அறிவித்தது எது?**

1. ஜின்கள் 2. ஹுதஹுத் பறவை 3. வேதத்திலிருந்து அறிவைக்கொண்டிருந்த ஒருவர்.

**3. மறுமையில் நல்ல நண்பனின் சகவாசம் கிடைக்காததை, தீயோர் எவ்வாறு கூறுவர்?**

1. நெருங்கிய எந்த சினேகிதனுமில்லையே, 2. இம்மையில் நல்லவர்களுடன் சேர்ந்திருக்க வேண்டாமா? 2. இரண்டும் சரி.

**4. நரகில் போடப்பட்டவர்கள், அவர்களுக்கிடையில் இவ்வாறு பேசிக்கொள்வார்கள்.**

1. குற்றவாளிகளே எங்களை வழிகெடுத்தனர் 2. நெருங்கிய எந்த நண்பனும் நமக்கில்லை 3. இரண்டும் சரி.

**5. அல்லாஹ் மறுமையில் சிலர்களின் நற்செயல்களை பரத்தப்பட்ட புழுதியாக ஆக்கிவிடுவதாகக் கூறுகின்றான் அதற்கான காரணம்**

1.முகஸ்துதி 2.பொய் 3.இரண்டும் தவறு

**(அனைத்து போட்டியாளர்களுக்கும் இக்கேள்விக்கான புள்ளி வழங்கப்பட்டது)**

**6. அவர்கள் தாழ்ந்தவர்கள் உம்மைப் பின்பற்றும் போது, உம்மீது...**

1. நாங்கள் ஈமான் கொள்வோமா? 2.நாங்கள் உங்களுடன் இருப்போமா? 3.நாங்கள் உம்முடன் போர் செய்வோமா) என்று கூறினார்கள்.

**7. ‘புகழ் அனைத்தும் அல்லாஹ்வுக்கே உரியது அவன்தான், முஃமின்களான தன் நல்லடியார்களில் அநேகரை விட நம்மை மேன்மையாக்கினான். என்று கூறியவர்கள்**

1. .நபி மூஸா மற்றும் ஹாரூன் (அலை) 2.நபி இப்ராஹீம் மற்றும் லூத் (அலை) 3.நபிதாவூத் மற்றும் சுலைமான் (அலை)

**8. என்னைத் தவிர ஒருவனை நீ இறைவனாக எடுத்துக் கொண்டால் உன்னை சிறையிலுடுவேன் என்று………. ……….. அவர்களுக்கு கூறினான்.**

1. பிர்அவ்ன், நபி மூஸா (அலை), 2.நம்ரூத் நபி இப்ராஹீம் (அலை), 3.பிர்அவ்ன் நபி யஃகூப் (அலை)

**9. கைசேதமே! என்று இரு கைகளையும் கடிக்கும் அந்நாளில் மனிதன் என்ன கூறுவான்?**

1.அல்லாஹ்வுக்குக் கட்டுப்பட்டு இருந்திருக்க வேண்டுமே! 2. தூதரின் வழியைத் தேர்வு செய்திருக்க வேண்டுமே! 3. முன்னோர்களைப் பின்பற்றிவிட்டோமே!

**10. யாருக்காக உமது இறக்கைகளை தாழ்த்துவீராக என அல்லாஹ் கட்டளையிட்டான்?**

1. தலைவர்களுக்கு 2. பெற்றோர்களுக்கு 3. உம்மைப் பின்பற்றிய முஃமின்களுக்கு

**11. ஷுஅரா எனும் அத்தியாயத்தில் “ஷுஅரா” என்று எத்தனை இடத்தில் இடம்பெற்றுள்ளது?**

1. ஒன்று 2. இரண்டு 3.நான்கு

**12. பொறுமையாக இருந்தால் சுவனத்தில் அவர்களுக்கு**

1. மாளிகை 2. பட்டாடை 3.தங்கம் வழங்கப்படும்

**13. ஸபஃ கூட்டத்தினர் இஸ்லாத்தில் இணையக் காரணமாக இருந்த முதல் அழைப்பாளர் யார்?**

1. சுலைமான் (அலை) 2. ஹுத்ஹுத் 3. இஃப்ரீத் ஜின்

**14. நோயுற்றால் அவன்தான் எனக்கு நிவாரணம் வழங்குவான் எனக்கூறிய நபி யார்?**

1. மூஸா நபி 2. ஈஸா நபி <u>3. இப்றாஹீம் நபி (ஸல்)</u>

**15. தோப்புவாசிகளிடம் பேசிய நபி யார்?**

1. லூத் நபி <u>2. ஷுஐப் நபி</u> 3. ஸாலிஹ் நபி (அலை)

**16. "நம்ல்" என்றால் பொருள் என்ன?**

<u>1. எறும்பு</u> 2. ஈ 3. ஹுத்ஹுத் பறவை

**17. ஹுத்ஹுத் பறவை எந்த நபியோடு பேசியது?**

1. மூஸா நபி 2. ஈஸா நபி <u>3. சுலைமான் நபி (அலை)</u>

**18. தமூத் கூட்டத்தாருக்கு அனுப்பப்பட்ட நபி யார்?**

1. லூத் நபி <u>2. ஸாலிஹ் நபி</u> 3. ஷுஐப் நபி (அலை)

**19. சூரதுல் ஷு அராவில் எத்தனை நபிமார்களின் சரிதைகள் அடங்கியுள்ளன?**

1- 9 2- 10 <u>3- 8</u>

**20. நம்பிக்கையாளர்களான அவனது அடியார்களில் அதிகமானோரை விட எம்மை மேன்மைப் படுத்திய அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும் எனக் கூறியவர்கள்.**

<u>1. தாவூத், சுலைமான்</u> 2- முஸா, ஹாரூன் 3- இப்றாஹீம், இஸ்மாயீல்

**21. இந்த (பகுதியில்) ஜு ஸ்உவில் எத்தனை நபிமார்களின் பெயர்கள் கூறப்பட்டுள்ளன?**

<u>1-10</u> 2- 12 3- 9

**22. இந்த ஜு ஸ்உவில் (பிரிவில்) உள்ள எல்லா அத்தியாயங்களிலும் கூறப்பட்ட நபியின் பெயர் யாது?**

1. இப்றாஹீம் <u>2- மூஸா</u> 3- நூஹ் (அலை)

**23. உனது அருளினால் எனது நல்லடியார்களில் என்னை சேர்த்துவிடுவாயாக என வேண்டிய நபி?**

1- <u>சுலைமான்</u> 2- தாவூத் 3- மூஸா

**24. உறுதியான செய்தியொன்றைக் கொண்டுவந்திருக்கிறேன்" எனும் செய்தி அடங்கியிருக்கும் வசனம்?**

<u>1-அந்நம்ல்: 22</u> 2- அஷ்ஷு அரா:34 3- அல்ஃபுர்கான்: 44)

**25. எமது இரட்சகனை நாம் காண வேண்டாமா' எனக் கேட்பவர்கள்?**

<u>1-அல்லாஹ்வை சந்திக்க ஆதரவு வைக்காதவர்கள்</u> 2. சூனியக்காரர்கள் 3- இரண்டும் சரி

**26. அல்லாஹ் அல்குர்ஆனை சிறிது சிறிதாக இறக்கிவைத்ததற்குக் கூறிய காரணம்?**

<u>1. நபி (ஸல்) அவர்களின் உள்ளத்தை உறுதிப்படுத்துவதற்காக</u> 2. எல்லா மக்களும் ஒன்று சேர்வதற்காக 3. மேற்கூறிய இரண்டும் சரி

**27. 'ஃபிர்அவ்னின் கூட்டத்தினரை நாம் அடியோடு அழித்தோம்' என இடம்பெற்ற வசனத்தை அடுத்து கூறப்படும் மூழ்கடிக்கபட்ட சமுதாயம்?**

<u>1. நூஹ் (அலை)</u> 2. மூஸா (அலை) 3. லூத் (அலை) அவர்களின் சமுதாயம்

**28. அல்லாஹ்வின் அடியார்களின் பண்புகளைப் பற்றி அல்லாஹ் தொடராகக் கூறும் வசனங்கள்?**

<u>1. அல்புர்கான்: 63-74</u> 2. அந்நம்ல்:36-42 3. அஷ்ஷு அரா:36-42

**29. எங்கள் இரட்சகன் எங்களை மன்னிக்கவே நாங்கள் ஆசைப்படுகிறோம் எனக் கூறியவர்கள்?**

<u>1. சூனியக்காரர்கள்</u> 2. நூஹ் (அலை) அவர்கள் சமூகம் 3. பனூ இஸ்ராஈல்

**30. மாளிகை வழங்கப்படவிருப்பதாக அல்லாஹ் யாரைப் பார்த்துக் கூறுகிறான்?**

1. முஃமின்கள் <u>2. அர்ரஹ்மானின் அடியார்கள்</u> 3. இரண்டும் சரி

**சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (✗) எனவும் இடுக.**

1. அவ்வாறே நாங்கள் ஒவ்வொரு நபிக்கும் தீயவர்களிலிருந்து எதிரிகளை வைத்திருந்தோம் (✗)
2. அல்லாஹ்வின் அடியார்கள் பூமியில் பணிவாக நடப்பார்கள், அறிவில்லாதோரு உரையாடும் போது ஸலாம் கூறுவார்கள் (✓)
3. மூஸாவைப் பார்த்து, நீர் பல வருடங்கள் எம்மோடு இருந்தீர் என்று பிர்அவ்ன் கூறினான். (✓)
4. நீர் (கொலையும்) செய்தீர், நன்றிகெட்டதாகவும் இருக்கின்றாய் என பிர்அவ்ன் கூறினான் (✓)
5. தன்னைச் சூழ இருந்த பிரமுகர்களிடம் 'நிச்சயமாக இவர் கற்றரிந்த ஒரு சூனியக்காரர்' என்று பிர்அவ்ன் கூறினான் (✓)
6. நீங்கள் போடக்கூடியதைப் போடுங்கள் என பிர்அவ்ன் கூறினான் (✗)
7. மூஸாவின் றப்பின் கண்ணியத்தின் மீது சத்தியமாக நாங்களே வெற்றியாளர்கள் (✗)
8. உமது பார்வை உம்மை நோக்கித் திரும்புவதற்கு முன் அதை நான் உம்மிடம கொண்டு வருவேன் என ஜின்களிலுள்ள இப்ரீத் கூறியது (✗)
9. "நீர் எங்களுக்கு உபதேசம் செயதாலும் அல்லது நீர் எங்களுக்கு உபதேசம் செய்பவராக இல்லாதிருப்பினும் (இரண்டுமே) எங்களுக்கு சமம்தான்' என்று சமூத் கூட்டத்தினா் கூறினார்கள் (✗)
10. அவா்கள் செய்யாததைக் கூறுவார்கள் என்று அல்லாஹ் கவிஞா்களைப் பற்றி கூறுகின்றான் (✓)

இப்போட்டியில் கலந்துகொண்டவர்கள் மொத்தம் 220

பரிசில்களை வெற்றிகொண்டவர்களின் எண்ணிக்கை 10 அவர்கள் பின்வருமாறு:

1. Fareena Seyed Ahmed
2. Fathima Farween
3. Muhammed yousuf kawthul Alam
4. Musthaq Ahmed
5. Dr, Haleeth Ibraheem Mohideen Aliyar
6. Abdul Hakeem Mohamed zakaria
7. Fathima Fawmiya
8. K.S. Thajunnisa Syed Mohamed Ali
9. Amina Banu Yousuf Siddick
10. Sithy Sameena Zubair